<u>சார்பு நீதிமன்றம், வந்தவாசி திருவண்ணாமலை மாவட்டம்.</u>

முன்னிலை– திருமதி.ச.சரண்யா., எம்.எல்.,

சார்பு நீதிபதி, வந்தவாசி

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19–ம் நாள் வெள்ளிக்கிழமை

<u>வழக்கிடை மனு எண்.03/2025 in அசல் வழக்கு எண்.80/2025</u>

ரவிச்சந்திரன் ......மனுதாரர்

/எதிர்/

1. சந்தோஷ் மணிகண்டன்

2. சூரியகாந்தி ..... எதிர்மனுதாரர்கள்

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக இறுதியாக 09.09.2025 அன்று விசாரணைக்கு வந்து, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. V.G.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ஜெ. நேதாஜி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், மனு மற்றும் எதிர்உரை ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## <u>உத்தரவு</u>

இம்மனு கட்டளை XXXIX, விதி. 1 மற்றும் 2 உ.வி.மு.ச.வின் கீழ் மனு சொத்தில் மனுதாரரின் அமைதியான அனுபவத்தை எதிர்மனுதாரர்களோ, அவரது ஆட்களோ தடை செய்யாமல் இருக்க

இடைக்கால தடை உத்தரவு பரிகாரம் தாவா முடியும் வரை பிறப்பிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்–</u>

2.1) இம்மனுவின் மனுதாரர் என்றும், மேற்படி வழக்கில் வாதி என்றும் மனு சொத்து ஆதியில் ராஜண்ணன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றும், மனு சொத்து மற்றும் இதர சொத்துக்களும் பூர்வீகமாக பாத்தியப்பட்டு ஆண்டு அனுபவித்து வந்த சொத்து என்றும், மேற்படி சொத்தில் மனு சொத்தான வீட்டுமனை ஆனது மொத்தம் 0.25 சென்ட் என்றும், மேற்படி சொத்தில் இருபுறம் ஓட்டு வீடு நடுவில் மெத்தை வீடு சேர்ந்த 2 வீடுகள் கட்டி அனுபவித்து வந்ததாகவும், மேற்படி ராஜண்ணன் என்பவருக்கு இரண்டு வாரிசுகள் என்றும், மேற்படி மனு சொத்தான 0.25 சென்ட் நிலத்தை இரண்டு வாரிசுகளும் பாதி பாதி என தலா 0.12 1/2 சென்ட் பிரித்து கொண்டு இரண்டு வீட்டையும் தனித்தனியாக பிரித்து கொண்டதாகவும், மேற்படி மனு சொத்தான 0.12 1/2 சென்ட் வீட்டு மனை ராமலிங்கம் என்பவருக்கு ஒதுக்கப்பட்டு மேலும் முத்து என்பவருக்கு தனியாக வேறு வீட்டுமனை ஒதுக்கப்பட்டதாகவும் மேற்படி ராமலிங்கம் என்பவர் மனு சொத்தை அனுபவித்து வந்ததாகவும், அப்போது மேற்படி மனு சொத்து கிராமத்தை சேர்ந்த ஆறுமுக முதலியார் குமாரர் பொன்னுரங்கம் மற்றும் பொன்னுரங்கம் குமாரர் சாம்பசிவம் இருவரும் மனு சொத்து சம்மந்தமாக தகராறு செய்த காரணத்தால் ஆரணி உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.674/1994 என்று நிரந்தர தடை உத்தரவு வழக்கை தனது தந்தை தாக்கல் செய்ததாகவும், மேற்படி வழக்கில் கடந்த 13.06.2000ல் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

2.2) கடந்த 23.09.2005 தேதியில் மனு சொத்து மற்றும் இதர சொத்துக்களையும் சேர்த்து பாகப்பிரிவினை செய்து கொண்டதாகவும், அதன் ஆவண எண்.1201/2005 என்றும் மேற்படி பாகப்பிரிவினையில் மனு சொத்தானது தன் பெயருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் ராமலிங்கத்தின் மற்றொரு மகன் ஜெய்சங்கர் என்பவருக்கு வேறு வீட்டுமனைகள் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி 2005 பாகப்பிரிவினையில் இருந்து தற்போது வரையில் மனு சொத்தை தான் தான் இன்றுவரையில் அனுபவித்து வருவதாகவும், கடந்த 28.05.2025 தேதியில் பொன்னூர் காவல் நிலையத்தில் இருந்து தன்னை அழைத்ததாகவும், 30.05.2025 தேதியில் விசாரணைக்கு ஆஜராகுமாறு தெரிவித்துள்ளதாகவும், அதேபோல் விசாரணைக்கு சென்று விசாரணையும் செய்ததாகவும், அங்கு சென்றபோது தான் 1ம் பிரதிவாதி தன் மீது புகார் அளித்திருந்தார் என்பது தெரிய வந்ததாகவும், அதில் தனது வீட்டின் பாதி பகுதி UDR வரைபடத்தின்படி 1, 2 பிரதிவாதிகளுக்கு வருவதாகவும் அதனை தான் தடை செய்துவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

2.3) மேற்படி மனு சொத்தானது தனது மூதாதையர்கள் அனுபவித்து வந்து தற்போது தான் அனுபவித்து வருவதாகவும், அதேபோல் மேற்படி மனு சொத்தில் உள்ள வீடானது தனது மூதாதையர் கட்டிய வீடு என்றும், சுமார் 70 வருடம் அனுபவித்து வந்து தற்போது 1, 2 பிரதிவாதிகள் தகராறு செய்ததாகவும், மேலும் 04.06.2025 தேதியில் மேற்படி 1, 2 பிரதிவாதிகள் அவர்களின் வீட்டை இடித்துவிட்டு அரசு வீடு கட்டுவதற்காக ஓட்டை பிரித்து அதனை தனது வீட்டின் முன்புறம் உள்ள வழியிலும் போடப்பட்டு

உள்ளதாகவும், அரசு அதிகாரிகள் எதிர்மனுதாரர்கள் கையில் உள்ளதாகவும், எனவே இந்த இடைக்கால தடை உத்தரவு பரிகாரம் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3. எதிர்மனுதாரர்கள்/ 1, 2 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:–</u>**

(3.1) மனு சொத்து முழுக்க முழுக்க இவ்வெதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்றும், இம்மனு சொத்து விவரத்திலும் தெரிவித்துள்ள தாவா சொத்தின் சர்வே எண், அதன் விஸ்தீரணம் அதன் நான்கு பக்க எல்லை விவரங்கள், அளவுகள், அனைத்தும் தவறு, சரியல்ல என்றும், எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்து சர்வே எண்.94/13B என்ற நிலமானது 30 ஆண்டுகளுக்கு முன்பாகவே உட்பிரிவுகள் செய்யப்பட்டு தனித்தனியே பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும், மனுதாரர்/வாதி குறிப்பிடுவது போல் தாவா சொத்து சர்வே எண். 94/13B–ல் 0.25 செண்ட், மனுதாரர்/வாதியின் பாட்டனார் மற்றும் 1ஆம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியின் பாட்டனார் ஆகியோருக்கு இடையே தலா 0.12 1/2 செண்ட் வீதம் பாகம் பிரித்துக் கொண்ட சொத்தில் மேற்படி சொத்துக்கு உட்பட்ட இடத்தில் தற்போது சர்வே எண். 94/13B4 என உட்பிரிவு செய்துள்ள பொது பாதைக்காக விட்ட பகுதியும், இருபாகஸ்தர்களுக்கும் உரிமையான பொதுவான கிணறு அமைந்துள்ள சர்வே எண். 94/13B2 என உட்பிரிவு செய்து மனுதாரர்/வாதியின் தகப்பனார் பெயரிலும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர்களிலும் கூட்டுப்பட்டாவாக வழங்கியுள்ள பகுதியும் அடங்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

3.2) அதன்படி தாவா சொத்து கடந்த 1994 ஆம் ஆண்டுக்கு முன்பாகவே நத்தம் நிலவரித்திட்டத்தின் கீழ் உட்பிரிவு செய்யப்பட்டு தனித்தனி சர்வே எண்கள் வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் நன்கு தெரிந்தே மனுதாரர்/வாதி அவரது வழக்குரையிலும் மனுவில் உட்பிரிவு விவரங்களை தெரிவிக்காமல் சொத்து விவரத்தில் உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண்ணை குறிப்பிடாமல் மறைத்து நீதிமன்ற அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து தவறான உத்தரவு பெறும் தீய எண்ணத்திலும் சர்வே எண். 94/13B என்ற பழைய முழு சொத்துக்கான 0.25 செண்ட் விஸ்தீரண விவரத்தை குறிப்பிட்டு அதில் பாதி பாகம் 0.12 1/2 செண்ட் என சொத்து விவரம் கண்டு வழக்கிட்டுள்ளது முறையற்றது என்றும், மேற்படி 28.05.2025 தேதியில் பொன்னூர் காவல் நிலையத்தில் விசாரணை செய்தபோது தான் தாவா சர்வே எண் வரைபடத்தில் வாதிகளின் வீட்டில் ஒரு பகுதி இவ்வெதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகளின் அத்தில் வருவதாக தெரியவந்ததாக வாதி தெரிவித்து உள்ள சங்கதிகளும், இதர சங்கதிகளும் இவ்வழக்குக்காக புனையப்பட்ட கற்பனை சங்கதிகள் என திட்டவட்டமாக மறுக்கிறார்கள் என்றும், மேலும் வாதி / மனுதாரர் இவ்வழக்கில் கோரியுள்ள உரிமை விளம்புகை பரிகாரங்கள் உள்ளிட்ட எந்த பரிகாரமும் பெறுவதற்கு அருகதை அற்றவர் என்றும், மனுதாரர்/வாதிக்கு இப்பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்கள் அவர்களுக்குரிய பகுதியில் வீடு கட்டும் பணியை தடை செய்ய கோருவதற்கு முகாந்திரமும் அருகதையும் இல்லை என்றும், எனவே இம்மனுவை எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5. இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டியது பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கவேண்டுமா? இல்லை? என்பதே ஆகும்.**

(i) இம்மனு கட்டளை XXXIX, விதி. 1 மற்றும் 2 உ.வி.மு.ச.வின் கீழ் மனு சொத்தில் மனுதாரரின் அமைதியான அனுபவத்தை எதிர்மனுதாரர்களோ, அவரது ஆட்களோ தடை செய்யாமல் இருக்க இடைக்கால தடை உத்தரவு பரிகாரம் தாவா முடியும் வரை பிறப்பிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தன்னுடைய மனுவில் மனு சொத்து ஆதியில் ராஜண்ணன் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்ததாகவும், அவருக்கு பின்னிட்டு அவரது இரண்டு வாரிசுகளான சின்னதுரை மற்றும் ராஜகோபால் ஆகியோர் மனு சொத்தான 0.25 சென்ட் நிலத்தை பாதியாக பிரித்து தலா 12.1/2 சென்ட் என்று பிரித்து இரண்டு வீடுகளை தனித்தனியாக பிரித்து அனுபவித்து வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். ராஜகோபால் என்பவருக்கு ராமலிங்கம் மற்றும் முத்து ஆகிய இரண்டு வாரிசுகள் என்றும், ராஜகோபாலுக்கு ஒதுக்கப்பட்ட 12.1/2 சென்ட் வீட்டு மனை ராமலிங்கம் என்பவருக்கு ஒதுக்கப்பட்டது என்றும், முத்து என்பவருக்கு வேறு தனி வீட்டு மனை ஒதுக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ராமலிங்கம் என்பவர் மனு சொத்து சம்மந்தமாக பொன்னுரங்கம் மற்றும் சாம்பவசிவம் ஆகியோர் மீது ஆரணி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.674/1994 என்ற வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கு பின்னிட்டு வந்தவாசி நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு அ.வ.எண்.484/1995 என்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு அந்த வழக்கில் 13.06.2000 தேதியில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ராமலிங்கத்திற்கு வாதியும் ஜெய்சங்கர் என்பவரும் வாரிசுகள் என்றும் அவர்கள் இருவரிடையே 23.09.2005

தேதியில் ஏற்பட்ட பாகப்பிரிவினையின் படி மனு சொத்து மனுதாரர்/வாதிக்கு ஒதுக்கப்பட்டதாகவும், 2005ம் ஆண்டிலிருந்து தற்போது வரை மனு சொத்தில் மனுதாரர் தான் அனுபவத்தில் இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மனு சொத்து குறித்து 28.05.2005 தேதியில் பொன்னூர் காவல் நிலையத்தில் 1, 2 எதிர்மனுதாரர்கள் புகார் அளித்து அதன் பேரில் 30.05.2005 அன்று விசாரணைக்கு அழைத்தபோது தான் UDR வரைபடத்தின்படி 1, 2 பிரதிவாதிகளுக்கு மனுதாரரின் வீட்டின் பாதி பகுதி வருவதாக குறிப்பிட்டார்கள் என்றும் மனுதாரர் கூறியுள்ளார். மனு சொத்தில் உள்ள வீட்டில் மனுதாரரும் அவருடைய மூதாதையர்களும் கடந்த 70 வருடங்களாக அனுபவத்தில் இருந்து வருவதாகவும் கடந்த 04.06.2025 தேதியில் மேற்படி 1, 2 எதிர்மனுதாரர்கள் அவர்களின் வீட்டை இடித்துவிட்டு அரசு வீடு கட்டுவதற்காக ஓட்டை பிரித்து தனது வீட்டின் முன்புறமும் போட்டுள்ளதாகவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். எனவே மனுதாரர் உரிமைவிளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்து மனுசொத்தில் மனுதாரரின் அமைதியான அனுபவத்தை எதிர்மனுதாரர்களோ அவர்களது ஆட்களோ தடை செய்யாமல் இருக்க ஒரு இடைக்கால தடை உத்தரவு பரிகாரம் தாவா முடியும் வரை பிறப்பிக்க கோரியும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

(ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில் மனு சங்கதிகள் அனைத்தும் மறுக்கப்பட்டுள்ளன. மேலும் தாவா சொத்து சர்வே எண்.94/13B என்ற நிலமானது 30 ஆண்டுகளுக்கு முன்பே சர்வே எண்.94/13B1 எண்.94/13B2, சர்வே எண்.94/13B3 மற்றும் சர்வே

எண்.94/13B4 என உட்பிரிவு செய்யப்பட்டு தனித்தனியே பட்டா வழங்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். மனுதாரரின் பாட்டனாரும் 1ம் எதிர்மனுதாரரின் பாட்டனாரும் சர்வே எண்.94/13Bல் இருந்த 25 சென்டை தலா 12 1/2 சென்ட் வீதம் பாகம் பிரித்து கொண்டதில் மேற்படி சொத்திற்கு உட்பட்ட இடத்தில் தற்போது சர்வே எண்.94/13B4 என உட்பிரிவு செய்துள்ள பொது பாதைக்காக விட்டபகுதியும் இருபாகஸ்தர்களுக்கும் உரிமையான பொதுவான கிணறு அமைந்துள்ள பகுதி சர்வே எண் 94/13B2 என உட்பிரிவு செய்யப்பட்டு மனுதாரர்களின் தகப்பனாரின் பெயரிலும் 1ம் எதிர்மனுதாரரின் தகப்பனாரின் பெயரிலும் கூட்டு பட்டா வழங்கியுள்ள பகுதியும் அடங்கும் என்று எதிர்மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர். மனுதாரர் அவருக்கு பட்டா வழங்கப்பட்ட சர்வே எண். 94/13B1 என உட்பிரிவு செய்யப்பட்ட பகுதியை மட்டுமே பட்டா படி அனுபவித்து வருவதாக எதிர்மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் மேற்சொன்ன உட்பிரிவு குறித்து மனுதாரர் எவ்வித சங்கதிகளும் குறிப்பிடாமல் இம்மனுவினையும் வழக்கினையும் தாக்கல் செய்துள்ளது தவறானது என்று குறிப்பிட்டுள்ளார்கள். சர்வே எண். 94/13B3 என்று உட்பிரிவு செய்யப்பட்டு கூட்டுபட்டா வழங்கப்பட்டுள்ள பகுதியை மட்டுமே 1ம் எதிர்மனுதாரர் அனுபவித்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் சர்வே எண். 94/13B4 என உட்பிரிவு செய்யப்பட்ட பகுதிக்குள் தெருவீதி அமைக்கப்பட்டு புறம்போக்கு என வழக்காடு செய்யப்பட்டு பொது வீதியாக பயன்பாட்டில் உள்ள பகுதியும் சர்வே எண். 94/13B2 என உட்பிரிவு செய்துள்ள மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களுக்கு பொதுவாக பாத்தியப்பட்ட கூட்டுபட்டா வழங்கப்பட்டுள்ள பொது கிணறு அமைந்துள்ள பகுதியும் சர்வே எண். 94/13B3ல் உள்ள 25 சென்ட் நிலத்தின் ஒரு

பகுதியாகும். எனவே இருதரப்பினர்களுக்கும் முந்தைய காலத்தில் பாகம் பிரித்து கொண்ட விஸ்தீரணத்திலிருந்து கழித்துக்கொள்ள வேண்டிய மேற்படி 12 1/2 சென்ட் ஆகும். எனவே மேற்படி சங்கதிகள் அனைத்தும் மறைத்து எதிர்மனுதாரர் அவரது இடத்தில் அரசு திட்டத்தின் கீழ் வீடு கட்ட முயன்றபோது மனுதாரர் பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும் உண்மை சங்கதிகளை மறைத்து இந்நீதிமன்றத்திலிருந்து Status Quo உத்தரவு பெற்றுள்ளதாகவும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்று எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(iii) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனுதாரர் தன்னுடைய மனுவில் மனு சொத்து சர்வே எண். 94/13Bல் உள்ள 25 சென்டில் 12 1/2 சென்டை குறிப்பிட்டுள்ளார். ஆனால் எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்சொன்ன சர்வே எண். 94/13B என்பது 30 வருடங்களுக்கு முன்பே உட்பிரிவு செய்யப்பட்டுவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் தரப்பில் மனுதாரர் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள WP No.32328/2025 என்ற வழக்கில் 04.09.2025 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை தாக்கல் செய்துள்ளார். மேற்சொன்ன உத்தரவில் மனுதாரரே சர்வே எண். 94/13B என்பது சர்வே எண். 94/13B1 மற்றும் சர்வே எண். 94/13B2 என்று உட்பிரிவு செய்யப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்று கூறப்பட்டுள்ளது. மேற்படி உட்பிரிவு செய்யப்பட்டபோது புலவரைபடத்தில் அளவீடுகள் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது. மேற்சொன்ன வழக்கில் இவ்வழக்கின் மனுதாரரே

மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் சர்வே எண். 94/13B என்பது உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் இந்நீதிமன்றத்தில் மனுதாரர் மனு சொத்தாக சர்வே எண். 94/13B என்று உட்பிரிவு செய்யப்படாத சர்வே எண்ணை குறிப்பிட்டு அதில் மொத்த விஸ்தீரணமாக 12 1/2 சென்ட் என்று குறிப்பிட்டுள்ளார். எனவே மனுதாரர் உண்மை சங்கதிகளை தெரிவித்து இந்நீதிமன்றத்தில் இம்மனுவினை தாக்கல் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் என்பது Discretionary Relief ஆகும். அத்தகைய பரிகாரத்தை கோரும் நபர் உண்மை சங்கதிகளை முழுமையாக தெரிவித்து தூய்மையான கரங்களுடன் இந்நீதிமன்றத்தை அணுகினால் மட்டுமே அத்தகைய பரிகாரம் அவருக்கு வழங்கப்படும். ஆனால் இவ்வழக்கில் மனுதாரர் முழுமையான சங்கதிகளை தெரிவிக்காமல் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்பது எடுத்த எடுப்பிலேயே தெரியவருகின்றது.

(iv) இம்மனுவில் மனு சொத்து குறித்து மனுதாரர் குறிப்பிட்டுள்ள இதர சங்கதிகளை குறித்தும் எதிர்மனுதாரர்கள் அதை மறுத்து குறிப்பிட்டுள்ள சங்கதிகளை குறித்தும், முழுவிசாரணையின்போது மட்டுமே முடிவு செய்ய இயலும். இம்மனுவினை பொறுத்தமட்டில், மனு சொத்தின் உண்மையான சர்வே எண் மற்றும் உட்பிரிவுகளை தெரிவிக்காமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு எவ்வகையிலும் நிலைக்கதக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே மனுதாரர் முதல் நிலை வழக்கையோ வசதி சமநிலையையோ எவ்வகையிலும் நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

எனவே மனுதாரர் கோரியுள்ள இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் அவருக்கு கிடைக்கதக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

<u>**முடிவாக:-**</u>

**இறுதியாக** ஏற்கனவே இம்மனுவில் இந்நீதிமன்றம் மனுதாரருக்கு வழங்கிய Status Quo பரிகாரம் இரத்து செய்யப்பட்டு இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகின்றது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19 ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பரப்பட்டது.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2025.09.19 05:05:56 +0530

சார்பு நீதிபதி,
வந்தவாசி

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2025.09.19 05:06:01 +0530

சார்பு நீதிபதி,
வந்தவாசி.